(திரு. இரா. தாமரைக்கனி) [1979 மார்ச் 14

தொகுதி யூனியன் ரோடு நல்ல முறையில் இருக்கிறது. அதற்காகவும் அவருக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற முறை நான் திருவில்லிப்புத்தூரில் சுற்றுப்பயணம் செய்தபோது அங்குள்ள படித்த சகோதரிகள், 40, 50 பேர்கள் என்னிடம், நாங்கள் திருமணம் ஆகாமல் இருக்கிறோம் இங்கே பெண் பார்க்க வரவேண்டியவர்கள் டவுனிலிருந்து வரவேண்டும். அவர்கள் வருவதற்கு சரியான போக்குவரத்து இல்லை, காரில் தான் வரவேண்டும். சம்பந்தம் செய்ய வருபவர்கள் இதனால் துன்பப்படுகிறார்கள். ஆகவே எங்களுக்குத் திருமணம் ஆவதற்காவது சீக்கிரம் பேருந்துகளை விட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆகவே அமைச்சர் அவர்களை தகப்பனார் நிலையில் சிந்தித்து அந்த இடங்களிலே விரைவில் பஸ் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் பேருந்து விடாமல் இருப்பதன் காரணமாக இத்தகைய இன்னல்கள் ஏற்படுகின்றன என்று எனக்குத் தெரியும். இது மட்டும் அல்ல பொருளாதார ரீதியாகவும் சில கிராமங்கள் பாதிக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் போக்கப்பட வேண்டும் என்ற காரணத்தினால்தான், இதை Unserved Road village, Inadequately served village and Excessively Served village பேருந்து இல்லாதிருக்கக்கூடிய வழித்தடங்கள், சரிவர பேருந்துகள் இல்லாத வழித்தடங்கள்,—அதாவது மிகக் குறைவாக பேருந்துகள் உள்ளவை, அதிகமாக பேருந்துகள் உள்ள வழித்தடங்கள் என்று பிரிக்கப்பட்டு, அந்த இடங்களில் பேருந்துகளை விடுவதற்கு அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

6- அரசினர் சட்ட முன் வடிவுகள்

(அ) பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவா அவர்களே, ''தமிழ்நாடு 1979—ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1979) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்'' என்று முன் மொழிகிறேன்.

---

*1979, பிப்ரவரி 19-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1979 மார்ச் 14] (திரு. எஸ். டி. சோமசுந்தரம்)

தலைவர் அவர்களே, இதே மாதிரி இரண்டு சட்ட முன் வடிவுகள் இருக்கின்றன. இரண்டையும் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம் என்று அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டையும் ஒன்றாக எடுத்துக் கொள்ள முடியாது. ஒவ்வொன்றாகத்தான் எடுக்கவேண்டும்.

* மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகை தாரர்கள், குத்தகை செலுத்தவில்லை என்ற காரணத்திற்காக வெளியேற்றப்படுகின்றனர். குத்தகை செலுத்தாத காரணத்திற்காக அவர்களை வெளியே அனுப்பவேண்டும் என்பதைத் தடுப்பதற்காக ஒரு சட்டம் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ம் தேதியோடு முடிவடைகிறது. இதை நீடிக்க வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப் படுகிறது. அவர்களை நீக்காமல், வெளியேற்றாமல் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப் படுகிறது; அது மட்டும் அல்ல. நிரந்தரமான பாதுகாப்பு பயிரிடுபவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக அரசு இதை பரிசீலனையும் செய்துக் கொண்டிருக்கிறது. இதன்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னால், அரசு அந்த நல்ல கருத்துக்களையெல்லாம் ஏற்று விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிவித்து அமர்கிறேன்.

[முற்பகல் 11-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதனின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (வெளியேற்றப் படுவதனின்றும் பாதுகாத்தல்)

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 மார்ச் 14

திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1979) சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, ஏகமனதாக நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக ஆக்கப்பெற்றது.

(ஆ) புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும், என்று கேட்டு, ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல உங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் 1386, 1387 பசலியின் போது பாதிக்கப்பட்ட காரணத்தால் அந்த மக்கள் குத்தகையைக் கொடுக்க முடியாது, பூரா குத்தகையையும் கொடுக்க முடியாது என்கிற காரணத்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது. இன்றைக்குக் கொடுக்கப்படுகிற இந்தப் பாதுகாப்பு 1979-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் தேதியோடு முடிவு அடைகிறது. அதை நீட்டிப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்கிற நேரத்தில், இதற்காக நிரந்தரமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குக் கொண்டு வரப்படும் சட்ட முன்வடிவை, இன்றைக்கு எதிர்க்கட்சியில் இருக்கும், பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினகர்ளும் இங்கே இல்லாவிட்டாலும், எனக்கு மிக நன்றாகத் தெயும், இந்தத்

*1979, பிப்ரவரி 19 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.